## ரூ.17,616 கோடியில் 19 தொழில் திட்டங்களை தொடங்கிவைத்து, ரூ.51,157 கோடி முதலீட்டில்

# 28 புதிய தொழில் திட்டங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

## தொழில்துறை சார்பில் 1,06,803 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்!

**சென்னை, ஆக.23-**

**தொழில் துறை சார்பில் 1,06,803 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் ரூ.17,616 கோடி முதலீட்டிலான 19 தொழில் திட்டங்களை தொடங்கி வைத்து, ரூ.51,157 கோடி முதலீட்டிலான 28 புதிய தொழில் திட்டங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு வருமாறு:-**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.08.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.17,616 கோடி முதலீட்டில் 64,968 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 19 தொழில் திட்டங்களைத் தொடங்கி வைத்து, ரூ.51,157 கோடி முதலீட்டில் 41,835 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 28 தொழில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடன் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இதன் விளைவாக, கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 31 லட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் ரூ.9.74 இலட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் இலக்கினை விரைவில் அடைவதற்காக தமிழ்நாடு அரசின் தொழில் துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், தொழில் துறை சார்பில் சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்கள் மொத்தம் 1,06,803 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் ரூ.17,616 கோடி முதலீட்டிலான 19 தொழில் திட்டங்களை தொடங்கி வைத்து, ரூ.51,157 கோடி முதலீட்டிலான 28 புதிய தொழில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்ட திட்டங்களில், ரூ.59,454 கோடி முதலீட்டிற்கான 32 தொழில் திட்டங்கள் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்ட திட்டங்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

### கிரீன்கோ குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்தியாவின் முன்னணி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனங்களின் ஒன்றான கிரீன்கோ குழுமத்தைச் சேர்ந்த கிரீன்கோ எனர்ஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், ரூ.20,114 கோடி முதலீடு மற்றும் 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 3 நீரேற்று புனல் மின் திட்டங்களை (Closed loop pumped storage projects) நிறுவுவதற்காக, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

### டிட்கோ மற்றும் டாடா டெக்னாலஜீஸ் கூட்டுத்திட்டமான தமிழ்நாடு பொறியியல் மற்றும் புத்தாக்க மையத்திற்கு (TN ENGINE) அடிக்கல் நாட்டுதல்

டிட்கோ மற்றும் டாடா டெக்னாலஜீஸ் ஆகிய நிறுவனங்கள் கூட்டாக இணைந்து, தமிழ்நாடு பொறியியல் மற்றும் புத்தாக்க மையம் (TN ENGINE) என்ற ஒரு பொது பொறியியல் வசதி மையத்தை தொடங்க உள்ளது. கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மொத்தம் ரூ.400 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின், ரூ.166.84 கோடி மதிப்பிலான முதற்கட்ட செயல்பாடுகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி வைத்தார்.

இந்த மையம், 9 வளர்ந்து வரும் தொழில் நுட்ப ஆய்வகங்களைக் கொண்டிருக்கும். இரண்டு கட்டமாக, இந்த மையம் தொடங்கப்படவுள்ள நிலையில், மேம்பட்ட இயந்திர ஆய்வுக்கூடம், சேர்க்கை உற்பத்தி ஆய்வகம் உள்ளிட்ட 4 மேம்பட்ட, அதி நவீன தொழில் நுட்ப ஆய்வகங்களை முதற்கட்டமாக TN ENGINE நிறுவனத்தால் செயல்படுத்தப்பட உள்ளது. விமானவியல், இயந்திரவியல், மின்சாரவியல் மற்றும் பரிசோதனை போன்ற துறைகளில் உள்ள புத்தொழில்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு தேவையான பொறியியல் ஆதரவுகளை இம்மையம் வழங்கும். முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட மற்றும் அடிக்கல் நாட்டப்பட்ட தொழில் திட்டங்களின் மூலம் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளில் பெருமளவு பெண்களுக்கானவை என்பது சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, ஓம்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டகுடோ இவானகா, செயிண்ட் கோபைன் (ஆசியபசிபிக்) நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் பி.சந்தானம், CIIதமிழ்நாடு அமைப்பின் தலைவர் ஸ்ரீவட்ஸ் ராம், செம்ப்கார்ப் நிறுவனத்தின் தெற்காசிய தலைமைச் செயல் அலுவலர் விபுல் துலி, கிரீன்கோகுழுமத்தின் தலைவர் மகேஷ், முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைவர்கள், அயல்நாட்டு தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (21.08.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தியாவின் முன்னணி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனங்களின் ஒன்றான கிரீன்கோ குழுமத்தைச் சேர்ந்த கிரீன்கோ எனர்ஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், ரூ.20,114 கோடி முதலீடு மற்றும் 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 3 நீரேற்று புனல் மின் திட்டங்களை (Closed loop pumped storage projects) நிறுவுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, ஓம்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டகுடோ இவானகா, செயிண்ட் கோபைன் (ஆசியபசிபிக்) நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் பி.சந்தானம், CIIதமிழ்நாடு அமைப்பின் தலைவர் ஸ்ரீவட்ஸ் ராம், செம்ப்கார்ப் நிறுவனத்தின் தெற்காசிய தலைமைச் செயல் அலுவலர் விபுல் துலி, கிரீன்கோ குழுமத்தின் தலைவர் மகேஷ், முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைவர்கள், அயல்நாட்டு தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ரூ.17,616 கோடி முதலீட்டில் 64,968 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 19 தொழில் திட்டங்களின் விவரங்கள்:

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | மாவட்டம் | துறை |
|---|---|---|---|
| 1 | ஓம்ரான் | திருவள்ளூர் | மருத்துவ உபகரணங்கள் |
| 2 | HiPi | காஞ்சிபுரம் | இயந்திர மின்னணுவியல் உபகரணங்கள் |
| 3 | மதர்சன் எலெக்ட்ரானிக்ஸ் | காஞ்சிபுரம் | மின்னணுவியல் |
| 4 | L & T புத்தாக்க மையம் | சென்னை | தகவல் தொழில் நுட்பம் |
| 5 | TVS இண்டியோன் லூகாஸ் டிவிஎஸ் | திருவள்ளூர் | மோட்டார் வாகன உதிரிபாகங்கள் |
| 6 | ஜுரோஜின் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் (அடிக்கல் + தொடக்கம்) | காஞ்சிபுரம் (தொடக்கம்) திருவள்ளூர் (அடிக்கல்) | தொழிற் பூங்கா |
| 7 | ரேனால்ட் நிஸ்ஸான் தொழில் நுட்பம் & வர்த்தக மையம் | செங்கல்பட்டு | தொழில் நுட்ப மையம் |
| 8 | சுந்தரம் ஃபாஸ்டனர்ஸ் | சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், விருதுநகர் | பொது உற்பத்தி |
| 9 | ESJAY குழுமம் | காஞ்சிபுரம் & இராணிப்பேட்டை | இரசாயனம் |
| 10 | ENES ராம்ராஜ் | ஈரோடு & திருப்பூர் | ஆடைகள் |
| 11 | கேப்ளின் பாய்ண்ட் | திருவள்ளூர் | மருத்துவப் பொருட்கள் |
| 12 | வெக் இண்டஸ்ட்ரீஸ் | கிருஷ்ணகிரி | பொது உற்பத்தி |
| 13 | மில்க்கி மிஸ்ட் | ஈரோடு | உணவு பதப்படுத்துதல் |
| 14 | குரிட் விண்ட் பிரைவேட் லிமிடெட் - விரிவாக்கம், சுவிட்சர்லாந்து | காஞ்சிபுரம் | பொது உற்பத்தி |
| 15 | ஹைபுரோ ஹெல்த்கேர் - விரிவாக்கம் | காஞ்சிபுரம் | உயிர் அறிவியல் |
| 16 | ராயல் என்ஃபீல்டு | திருவண்ணாமலை | மோட்டார் வாகனம் |
| 17 | குருப்போ காஸ்மோஸ், ஸ்பெயின் | காஞ்சிபுரம் | மோட்டார் வாகன உதிரிபாகங்கள் |
| 18 | GP சல்ஃபோனேட்ஸ் | திருவள்ளூர் | இரசாயனங்கள் |
| 19 | மதர்சன் ஹெல்த் | காஞ்சிபுரம் | மருத்துவ உபகரணங்கள் |

### முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட ரூ.51,157 கோடி முதலீட்டில் 41,835 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 28 நிறுவனங்களின் விவரங்கள்:

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | இடம் | துறை |
|---|---|---|---|
| 1 | செம்ப்கார்ப் பசுமை ஹைட்ரஜன் | தூத்துக்குடி | பசுமை ஹைட்ரஜன் |
| 2 | ரமாடெக்ஸ், சிங்கப்பூர் | செங்கல்பட்டு | ஆடைகள் |
| 3 | அசெண்டாஸ் முதல் கட்ட விரிவாக்கம் | திருவள்ளூர் | தொழிற் பூங்கா |
| 4 | ESR மூன்றாம் கட்டம் | காஞ்சிபுரம் | தொழிற் பூங்கா |
| 5 | மேப்பிள் ட்ரீ | திருவள்ளூர் | தொழிற் பூங்கா |
| 6 | செயின்ட் கோபைன், பிரான்சு | காஞ்சிபுரம் | பொது உற்பத்தி |
| 7 | சென்ஸ்டார் பிரைவேட் லிமிடெட், கொரியா | திருவள்ளூர் | பொது உற்பத்தி |
| 8 | ஹூண்டாய் மோட்டார், ஹைட்ரஜன் | செங்கல்பட்டு | மோட்டார் வாகனம் |
| 9 | மிட்சுபா | திருவள்ளூர் | மோட்டார் வாகன உதிரிபாகங்கள் |
| 10 | SATRAC / Kyokuto, ஜப்பான் | காஞ்சிபுரம் | மோட்டார் வாகன உதிரிபாகங்கள் |
| 11 | ப்ரகதி வேர்ஹௌசிங் | திருவள்ளூர் | தொழிற் பூங்கா |
| 12 | கேப்ஜெமினி | செங்கல்பட்டு | தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்ப சேவைகள் |
| 13 | பிரேக்ஸ் இந்தியா | கிருஷ்ணகிரி | மோட்டார் வாகன உதிரிபாகங்கள் |
| 14 | சீப்ராஸ் | காஞ்சிபுரம் | தொழிற் பூங்கா |
| 15 | கிரீன்பேஸ் | காஞ்சிபுரம் | தொழிற் பூங்கா |
| 16 | போன்ஃபிக்லியோலி | திருவண்ணாமலை | பொது உற்பத்தி |
| 17 | பாலிஹோஸ் குழுமம் | காஞ்சிபுரம் | பொது உற்பத்தி |
| 18 | KRR ஏர் | காஞ்சிபுரம் & திருநெல்வேலி | இரசாயனங்கள் |
| 19 | பேட்டர் இந்தியா | திருவள்ளூர் | பொது உற்பத்தி |
| 20 | மையா ஃபார்மா | கிருஷ்ணகிரி | உயிர் அறிவியல் |
| 21 | ஷ்விங் ஸ்டெட்டர் | திருவண்ணாமலை | பொது உற்பத்தி |
| 22 | சாஃப்ட்ஜெல் | காஞ்சிபுரம் | உயிர் அறிவியல் |
| 23 | ஜி கேர் கௌன்சில் | திருவள்ளூர் | உயிர் அறிவியல் |
| 24 | டேப்லட்ஸ் இந்தியா | செங்கல்பட்டு | உயிர் அறிவியல் |
| 25 | அரேமாண்ட் ஃபாஸ்டனர் | காஞ்சிபுரம் | பொது உற்பத்தி |
| 26 | பசந்த் பேட்டன்ஸ் | கிருஷ்ணகிரி | பொது உற்பத்தி |
| 27 | டாட்டா கம்யூனிகேஷன்ஸ் | செங்கல்பட்டு | தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்ப சேவைகள் |
| 28 | ஹிகால் டெக்னாலஜீஸ் | கிருஷ்ணகிரி | வான்வெளி & பாதுகாப்பு |